[4] ஆய்வுக் கட்டுரைப் பொருள் : யாழ்ப்பாணத்தில் நூலக வளர்ச்சி

ஆய்வாளர் : மனோன்மணி சண்முகதாஸ்
பல்தொழில் நுட்ப நிறுவனம்,
யாழ்ப்பாணம்.

முதன்முதலாக ஆரியச் சக்கரவர்த்திகளது காலத்திலே சரஸ்வதிமகால் என்ற நூல் நிலையம் ஒன்று இருந்ததாக அறியப்படுகின்றது. இதுவே யாழ்ப்பாணக் குடாநாட்டின் நூல்நிலைய வரலாற்றில் நாம் அறிகின்ற முதன்முதல் நூலகம் பற்றிய செய்தியாகவும் இருக்கின்றது. இச்செய்தி பற்றி பல்வேறு சான்றுகளும் இருப்பதனால் இதனை உறுதிப்படுத்தக் கூடியதாகவும் இருக்கின்றது. எனினும் தொடர்பாக இந்நூல் நிலையத்தினைப் பற்றிய செய்திகளை அறியமுடியவில்லை. அதன் தன்மை பற்றியோ அன்றேல் அமைப்புப் பற்றியோ எவ்வித தகவல்களையும் பெற முடியாமல் இருக்கின்றது. கையெழுத்துப் பிரதிகள் பல அங்கு சேகரிக்கப்பட்டு வைக்கப்பட்டிருந்தன என்ற குறிப்பு மட்டுமே எமக்குக் கிடைக்கின்றது. அவ்வாறு சேகரிக்கப்பட்டு வைத்திருந்த பிரதிகளை யார் வாசித்தார்கள்? அவற்றை வாசிப்பதற்கு யாருக்கு உரிமை இருந்தன என்பனபோன்ற விடயங்கள் தெளிவில்லாமலே இருக்கின்றன. தற்கால நூலகப் பண்புக்கமைய சரஸ்வதிமகால் இருந்ததாவென்பதையும் விளங்கிக்கொள்ள முடியாதிருக்கின்றது.

பரராசசேகரன் யாழ்ப்பாணக் குடாநாட்டை ஆளுங்காலத்தில் ஊர்கடோறும் பாடசாலைகள் அமைத்தும் தமிழ்ச் சங்கமொன்று தாபித்தும் தமிழை வளர்த்ததாக அறியமுடிகின்றது. புலவர்களைக்கொண்டு பலவகையான நூல்களையும் இயற்றுவித்தான். இவனமைத்த தமிழ்ச் சங்கமே இரண்டாவது தமிழ்ச் சங்கமாகும்.

> "இம்மன்னன் அழிந்துபோன சரஸ்வதி மகாலயமென்
> னும் பெயர்படைத்த நூலகத்தைப் புதுக்குவித்து
> அதில் இந்தியாவிலிருந்து தென்மொழி வடமொழி
> நூல்களை வருவித்துப் பலரும் படிக்குமாறு உதவினான்"

என கணேசையர் தமது ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர் சரித்திரம் என்னும் நூலிற் குறிப்பிட்டுச் செல்கிறார்.

ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தில் இந்நூல் நிலையம் கையெழுத்துப் பிரதிகளைச் சேர்த்துவைக்கின்ற ஓர் இடமாக இருந்திருக்கின்றதென்றே கொள்ள இடமுண்டு. இதனால் இது யாழ்ப்பாணத்தில் நூலக வளர்ச்சியிலே முதலாவது படியினையே காட்டி நிற்கின்றது. அரசியல் வரலாற்றிலே கல்வி சிறப்புற்றிருந்த காலத்தில் அக்கல்விக்கு உறுதுணையான நூல்களைத் — தமிழிலோ அன்றேல் பிறமொழிகளிலோ எழுதப்பட்டவற்றைப் – பேணவேண்டுமென்ற உணர்வின் அடிப்படையிலேயே இவை அங்கு சேகரிக்கப்பட்டிருக்கக்கூடும். மன்னர் ஆதரவும் இப்பணிக்ிருந்தமையால் அவற்றை ஓரிடத்திலே கொணர்ந்து வைத்திருக்கக்கூடும். எனவே இந்நூலகத்தினது தோற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் அக்காலத்தில் ஏற்பட்டிருந்த ஊக்கமான இலக்கிய வளர்ச்சியே காரணமெனலாம். இதனையே எமக்குக் கிடைத்த வரலாற்று ஆதாரங்களும் உறுதிப்படுத்தி நிற்கின்றன.

இலக்கிய வளர்ச்சியானது போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலத்தில் அந்நியரது படையெடுப்புக்களால் தடைப்பட்டது. கல்வி வளர்ச்சியில் இவர்கள்

அதிகம் ஊக்கம் காண்பிக்கவில்லை. தமது சமயத்தினைப் பரப்புவதற்காக கல்வியை ஒரு கருவியாக்கினர். இதனால் சமயக் கல்வியே நாட்டில் வளரும் நிலை ஏற்பட்டது. கோவில்களைப் பாடசாலைகளாக்கி சத்தியவேத போதனைக்கேற்ற கல்வியைச் சகலருக்கும் சமமாகப் பயிற்றினர். இக்காலத்தில் இவர்களால் மத சம்பந்தமான புத்தகங்களே பேணப்பட்டு வந்திருக்கலாம். இதனால் அவற்றை ஓரிடத்தில் தொகுத்து வைத்திருக்க எண்ணங் கொண்டிருந்தாலும் அதனை ஒழுங்காகச் செய்திருக்க முடியாது தமது தேவைக்கேற்ற கையெழுத்துப் பிரதிகளையே தம் கோவில்களில் சேகரித்து வைத்திருக்கக்கூடும். இவற்றை நாம் நூல்நிலையங்களென கொள்ள முடியாது. ஏனெனில் அக்காலத்து மக்களுக்கு இவர்கள் மொழியும் பிறமொழியாக இருந்தமையால் அந்நூல்களை வாசிப்பதுவும் இலகுவான காரியமாக இருந்திருக்க முடியாது. இதனால் ஆரியச்சக்கரவர்த்திகள் காலத்திலிருந்த சரஸ்வதி மகாலைப் போன்றதொரு நூலகத்தின் வளர்ச்சியை இக்காலத்தில் காணமுடியவில்லை.

அடுத்த கட்டமாக யாழ்ப்பாணத்தில் நூலக வளர்ச்சியில் நாவலரது காலப் பகுதியாகக் கொள்ளலாம். நாவலர் வாழ்ந்த காலப்பின்னணியும் சமய இயக்கங்களும் தமிழ் இலக்கிய வளர்ச்சியைப் பெருக்குவதற்கு உதவின. இக்காலத்தில் மக்களின் கல்வியை ஓங்கச் செய்வதற்குச் சமய நிறுவனங்கள் சிறந்த சாதனங்களாக விளங்கின. பப்ரிஸ்டு மிசன், வெஸ்லியன் மிசன், அமெரிக்க மிசன் ஆகிய சமய நிறுவனங்களின் தொண்டர்கள் இக்காலத்தில் இலங்கைக்குவந்து சமயப்பணியினை ஆற்றினர். இதனால் இக்காலத்தில் சமய நிறுவனங்களின் மூலமாகவே கல்வியினை வளர்க்கவேண்டியது மிகவும் அவசியமாக இருந்தது. நாவலரும் அதே அடிப்படையில் ஏனைய சமய நிறுவனங்களைப் போலவே கல்வியைப் பரப்பும் எண்ணங் கொண்டு செயலாற்றினார். மக்களுக்கு ஏற்ற புத்தகங்களை எழுதி அவற்றை வெளியிட்டார். இவற்றைச் சேகரித்து வைப்பதற்காக அவரால் என்ன முயற்சிகள் எடுக்கப்பட்டனவென்பது திட்டமாகத் தெரியாவிட்டாலும் அதற்கான முயற்சிகளில் அவர் ஈடுபட்டார் என்பது அவரது வரலாறு மூலமாக அறியக்கிடக்கிறது.

இதுபோலவே இக்காலப்பகுதியில் கிறிஸ்தவசமய இயக்கங்களும் இத்தகையதொரு நூற்பாதுகாப்பினைச் செய்ய முற்பட்டிருக்கின்றன. 1816-ஆம் ஆண்டளவில் அமெரிக்காவிலிருந்து முதன்முதலாக மிஷனரிமார் யாழ்ப்பாணத்திற்கு வந்தனர். தெல்லிப்பளை, வட்டுக்கோட்டை, உடுவில், மானிப்பாய், பண்டத்தரிப்பு என்னுமிடங்களில் தமது சமய ஊழியஸ்தாபனங்களை அவர்கள் நிறுவினர். 1832-ம் ஆண்டில் யாழ்ப்பாணச் சுவிசேஷ சங்கம் என ஒரு சங்கத்தை நிறுவி அதன்மூலமாக மிஷன் ஸ்தாபனங்களுக்கு அப்பாற்பட்ட கிராமங்களிலும் சமயத்தைப் பரப்பும் எண்ணம் கொண்டனர். கடவுளைப்பற்றியறிவதற்கும் கல்வி இன்றியமையாதது என்ற நோக்கத்துடன் இச்சங்கம் கடமையாற்றியதால் வேலணை, சரவணை, நெடுந்தீவு போன்ற இடங்களிலே பாடசாலைகளை நிறுவினர். இலவசமாகப் புத்தகங்களை வழங்கிக் கல்வியைப் பரப்பினர். இப்புத்தகங்கள் பாடசாலைகளிலே வைக்கப்பட்டிருந்தன. சங்கானை, உடுத்துறை போன்ற இடங்களிலும் திருச்சபைகள் நிறுவப்பட்டுக் கல்விப் போதனைகளும் மதப்பரம்பலும் நடைபெற்று வந்தன. அத்துடன் இவர்கள் தமிழ் இலக்கியத்தையும், இந்துசமயத்தையும் கற்றுத் தமது ஆராய்ச்சிகளின் பெறுபேற்றை வெளியிட்டும் வந்தனர். தமது தேவாலயங்களிலே மக்களுக்கு மதபோதனைகளை விரிவுரைகள்மூலம் செய்துவந்தவர். மத சம்பந்தமான புத்தகங்கள் பிறமொழியிலே இருந்தமையால் அவற்றினைப் படிப்பது எல்லோருக்கும் சுலபமான காரியமாக இருக்கவில்லை. இதனால் போதனை மூலமே கல்வி

கற்றோர் இதனைச் செய்துவந்தனர். மதகுருமார் புத்தகங்களைத் தேவாலயங்களிலே வைத்திருந்திருக்கக்கூடும். இதனால் இக்காலத்தில் தேவாலயங்கள்தான் நூலகங்கள் போல் விளங்கியிருக்கலாம்.

19-ம் நூற்றாண்டிறுதிப்பகுதியில் சைவசமயமும் கிறிஸ்தவ சமயமு நத் தமது வளர்ச்சியிலே முதிர்ந்து நிலை அடைந்தபோது கல்வி நிலையில் ஏற்பட்ட மாற்றங்களாலும் பத்திரிகைத்துறை என்னும் புதிய துறையின் வளர்ச்சியாலும் மக்களிடையே மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. 1841-ல் உதயதாரகை என்னும் பத்திரிகையும் 1889-இல் இந்துசாதனம் என்னும் பத்திரிகையும் குறிப்பாக மக்களுக்குப் பல்வேறு விடயங்களைப் பற்றிய அறிவினை ஊட்டத் தொடங்கின. இவை சமயக் கருத்துக்களையும் பொதுவிஷயங்களையும் பிரசுரித்தன. இப்பத்திரிகைகளைப் பொதுமக்கள் சென்று படிப்பதற்காக படிப்பறைகள் அல்லது புத்தகசாலைகள் அமைக்கப்பட்டன.

முதன்முதலாக யாழ்ப்பாணத்தில் வட்டுக்கோட்டை செமினாரியினால் ஸ்தாபிக்கப்பட்ட கல்லூரியில்தான் இத்தகைய நூல் நிலையமொன்று இருந்ததாக அறிய முடிகின்றது. இது 1872-ம் ஆண்டு நிறுவப்பட்டது. ஈழத்திலேயே இணையற்ற நூல்நிலையமென்று பலரதும் பாராட்டைப் பெற்றதும் இதுவேயாகும்.

1895-ம் ஆண்டிலும் அதற்குப்பின்னரும் நூலக வளர்ச்சியிலே இன்னொரு முன்னேற்றத்தினைக் காணக்கூடியதாக இருக்கின்றது. பள்ளிக்கூடங்களின் பெருக்கத்தினாலும் கல்வித்துறையில் ஏற்பட்ட வளர்ச்சியினாலும் இது ஏற்பட்டது. மாணவர்கள் தமது அறிவினைப் பெருக்குவதற்கு வாசிக்கும் பழக்கத்தினை மேற்கொள்ளத் தொடங்கினர். இதுவரை நிலவிவந்த பிரசங்கமரபு மாறித் தாமே விடயங்களை அறிந்து கொள்ளும் ஆர்வத்துடன் புத்தகங்களை நாடிச் செல்கின்ற நிலை ஏற்பட்டது. இதனால் பாடசாலைகளிலே நூலகங்கள் வளரத் தொடங்கின.

''கோப்பாய் வித்தியாசாலையார் புத்தகசாலை ஒன்றுக்கு அடியிடக் காண்பது சந்தோட கருமம். பிள்ளைகள் துண்டுகொண்டு பணம் தண்டலிற் திரிகின்றனர். வீட்டுக்குவீடு ஒவ்வொரு புத்தகசாலை இருந்தாலோ என்னும் ஆசை என்மனதில் நெடுங்காலங் குடிகொண்டது. வாய்ச்சியுளி இல்லாத தபதியும், கலப்பை நுகமில்லாத வேளாளனும் புத்தகமில்லாத ஆசிரியனும் ஒருவர்க்கொருவர் சமம். பாடசாலை யோட்டம் முடிந்தால் புத்தகங்கள் ஓட்டம் தொடங்கும். வேலை கிடைத்தால் புத்தகம் நஞ்சாகும். ஒரு விஷயத்தின் பேரில் யோசிக்கவேண்டுமானால் கற்றாருமருமை. புத்தகமுமருமை. பாடசாலைகளோடு புத்தகசாலை இருத்தலவசியம். பிறகும் தெண்டிப்பாராக'' என்னும் உதயதாரகையில் வெளிவந்த செய்தி இக்காலத்துப் பொதுமக்களிடையே புத்தகசாலைகளின் தேவையை எடுத்துக் கூறுவதாக அமைந்துள்ளது. இத்தகைய நூலகங்கள், வேறு இடங்களிலும் பிற்பட்ட காலங்களில் வளர்ச்சி பெற்றிருந்தமையினைக் கதிரேசு அவர்கள் எழுதிய ''கைநூல்'' சான்று காட்டி நிற்கிறது. இந்நூல் யாழப்பாண பொதுசன புத்தகசாலை பற்றியும் சென். யோசவ் கத்தோலிக்க புத்தகசாலை, விக்ரோறியா வாசினை நிலையம், பருத்தித்துறை வாசினை நிலையம், வை. எம். சி. ஏ. வாசினை நிலையம் என்பனபற்றியும் குறிப்பிடுகிறது.

இத்தகைய நூல் நிலையங்களுள் குறிப்பிடத்தக்கவொரு நூல்நிலையமாகக் கலாநிலையம் ஸ்தாபித்த நூலகத்தைக் கொள்ளலாம். 1930-ம் ஆண்டு ஆரம்பிக்

கப்பட்ட இந்நூல்நிலையம் கிட்டத்தட்ட 1135 நூல்களைக் கொண்டதாக அமைந்திருந்தது. இவற்றுள் அச்சில் இல்லாத நூல்களும், ஏட்டுப்பிரதிகளும் இருந்தன. ஒவ்வொரு ஆண்டிலும் புதுநூல்கள் இங்கு சேர்க்கப்பட்டன. இன்னும் ஒழுங்கமைப்பிலும் முன்னிருந்த புத்தகசாலைகளைவிடச் சில வேறுபட்ட முறைகள் கடைப்பிடிக்கப்பட்டன. புத்தகங்களைவிடத் திங்கள் வெளியீடுகளும், கிழமை வெளியீடுகளும், ஆங்கிலத் திங்கள் வெளியீடுகளும், ஆங்கிலவார வெளியீடுகளும், ஆங்கிலத் தினசரி வெளியீடுகளும் இங்கு ஒழுங்காக வாங்கப்பட்டுப் பொதுமக்கள் பாவனைக்காக விடப்பட்டிருந்தன. இன்னும் நூற்கொடைகளும் இங்கு நடைபெற்றன.

இதனால் இக்காலத்தில் யாழ்ப்பாண நூலகங்கள் ஒரு முழுமையான வளர்ச்சி நிலையினை அடைந்திருந்தனவென்று கொள்ளலாம். மக்களின் அறிவைப் பரப்பும் நோக்கத்துடன் இவை தொண்டாற்றி வந்தன. தம்மிடமிருந்த புத்தகங்களை எல்லோரும் படிப்பதற்குரிய பொது இடத்திலே வைக்கவேண்டும் என்ற எண்ணம் மக்களிடையே வளரத்தொடங்கியது. இதனால் குறிப்பிட்ட நூல் நிலையங்களுக்கு அதனைக் கொடுத்துதவினர். இதன்காரணமாக நூல் நிலையங்களில் புத்தகங்கள் அதிகரிக்கத் தொடங்கின. நூல்நிலையங்களின் இடப்பரப்பும் அகலவேண்டிய தேவை ஏற்பட்டது. இதனால் நூலகங்கள் தனிப்பட்ட கட்டிடங்களாக வந்தமையத் தொடங்கின. நூல் நிலையங்களுக்குப் பொறுப்பாளராக உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டனர். வேதனமும் அவர்களுக்கு வழங்கப்பட்டது. மக்களுக்கு இலவசமாகப் புத்தகங்களை எடுத்துத் தரக்கூடிய நிலையங்களாகவும் இவை மாறின. இதனால் பட்டினசபைகளின் பொறுப்பில் இந்நூலகங்கள் நாட்டில் செயற்படத்தொடங்கின. இவ்வாறே தற்போது யாழ்ப்பாணத்திலுள்ள பொதுசன நூலகம் 1934-ம் ஆண்டு ஆரம்பமாகியது.

# චින්තනයි – CINTANAI

## මෙම කලාපයේ

## In this number


1. සාහිත්‍ය විචාරය හා සූක්ෂ්මාත්මතාව
   කේ. කෛලාසපති

   Literary Criticism and Sensibility
   **K. Kailasapathy**

2. ආර්ථික විද්‍යාවේ පොදු න්‍යායයේ වැදගත්කම
   එන්. පේරින්පනාදන්

   Importance of the *General Theory* in Economics
   **N. Perinpanathan**

3. මානව විද්‍යාව හා නිර්මාණාත්මක සාහිත්‍යය
   කේ. ෂන්මුගලිංගම්

   Anthropology and Creative Literature
   **K. Shanmugalingam**

4. ශ්‍රී ලංකාවේ හින්දුආගම හා පැරණි බ්‍රාහ්මී සෙල්ලිපි
   එස්. කේ. සිත්‍රම්පලම්

   Hinduism and Early Brahmi Inscriptions of Sri Lanka
   **S. K. Sitrampalam**

5. විභක්ති සහ පද අනුක්‍රමය
   යෝගේශ්වරි ගනේෂලිංගම්

   Case and Word — Order
   **Yogeswary Ganeshalingam**

6. ශ්‍රී ලංකාව හා ඉන්දීය සාගරයේ වෙළඳාම් (ක්‍රි. පූ. 2 ක්‍රි. පූ — 13 ශ. ව.)
   එස්. සතියසීලන්

   Sri Lanka and Trade in the Indian Ocean (2nd C.B.C. — 13th C.A.D.)
   **S. Sathiyaseelan**

7. දකුණු ආසියානු අධ්‍යයන සම්මන්ත්‍රණ පත්‍රිකා (සාරාංශ)
   South Asian Studies Seminar Papers (Synopses)